


ஆதாரம்:
கூச்சிங் மாமறைமாவட்ட ஆயர்மாமன்ற தயாரிப்பு அறிக்கை

திருத்தும்:
அருள்பணி யூஜின்
இயக்குனர் மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி மையம் (API)

மின்னஞ்சல்:
apidirectorkl@gmail.com

INTERNAL CIRCULATION ONLY

BUL 38/2023

கூச்சிங் மாமறைமாவட்டம் (KAPA) சவால்களுக்கு செவிகொடுக்கவும், விவாதிக்கவும் ஒரு தளத்தை வழங்குகிறது. பார்-மதிப்பீடுசெய்-செயல்படு இந்த செயல்முறை திட்டங்களை வகுப்பதற்கு உதவியது. 5 ஆண்டுகால மதிப்பாய்வு வழிகளை மீட்டமைக்கவும், மீண்டும் உயிர்ப்பிக்கவும் உதவியது.

**1. கண்காணித்தல்:** அடிமட்டத்திலிருந்து பெற்றுக்கொண்ட பதில்கள் அவர்களின் முதிர்ச்சியைக் காட்டின. உதவிசெய்வதில் பங்கு மக்கள் மிகுந்த அக்கறைக் காட்டினர். ஊடகங்களின் பற்றாக்குறை அவர்களின் பங்கெடுப்பைக் குறைக்கிறது. இளைஞர்கள் தனிமைப்படுத்தப்பட்டதாக உணர்கிறார்கள். கொவிட் தொற்று ஒருபொதுவான மனநிறைவைக் கண்டது. அ) அனைத்து நிலைகளிலும் சிறந்த உறவுகள் மற்றும் பணிசெய்வதற்கான ஆர்வம் இருந்தது. ஆ) பன்முகத்தன்மையை நோக்கிய திறந்த மற்றும் தீர்ப்பிடாத தலைமைத்துவம் இ) புகுமுக கிறிஸ்துவர்களின் அனுபவத்தின் மேய்ப்புப்பணி அக்கறை. ஈ) திருஅவையின் நடைமுறைகளின் வழியாக கத்தோலிக்க நம்பிக்கையின் செழுமையை திறம்பட வலியுறுத்துதல்

**2. அனுபவம்:** 1) கிராமப்புற அடிமட்டத்தில் உள்ளவர்களின் நேர்மறையான எண்ணங்கள். ஆ) செயல்படும் சமூகங்களைத் தவிர நகர்ப்புற பங்குகள் பலவீனமாக இருந்தன. இ) பங்கு அருள்பணியாளர்கள், திருஅவை தலைவர்கள், பங்கு செயலவைக்குழு உறுப்பினர்கள் பயணங்கள் ஊக்கமளிப்பவையாக இருந்தன. ஈ) திருஅவையின் தேவைகளுக்குப் பதில் அளிக்கவும், முன்னேற்றம், வளர்ச்சி, பிரதிபலிப்பு மற்றும் புதுப்பித்தல் ஆகியவற்றுக்கான பலம் மற்றும் பலவீனங்களை மறுபரீசீலனை செய்யவும் ஆயர் மாமன்றக் கலாசாரம் அனைவருக்கும் உதவியாக இருந்தது. உ) திறந்த உள்ளம், வெளிப்படைத்தன்மை, வழிநடத்துதல், நம்பிக்கை மற்றும் அனைவருக்கும் பரிவு ஆகியவை இருந்தன. ஊ) கடவுளோடு கொண்டுள்ள தனிப்பட்ட உறவின் அழகு மற்றும் தனித்துவம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எ) கலாச்சாரத்தை ஊக்குவிப்பது அனைவருக்குள்ளும் உள்ள உறவுகளைப் பலப்படுத்துகிறது. பங்கேற்பு, ஆலோசனை, செவிகொடுத்தல் மற்று பகிர்ந்துகொள்ளுதல் அனைத்தும் உண்மையாக இருந்தது.

**3. மாமறை மாவட்டத்தின் கலாச்சார சாயல்** துடிப்பான அக்கறையுள்ள முன்னேறிச்செல்லும் மற்றும் வழிபாட்டு இல்லமாகும். இது நமது இனக்குழுக்களின் பாரம்பரிய அடையாளத்தின் தனித்துவத்தைப் பாதுகாக்கிறது. இது நமது சமூகங்களில் ஒற்றுமையை வளர்க்கிறது. நம் இளைஞர்கள் ஆண்டவரின் திராட்சைத் தோட்டத்தில் பணிசெய்ய ஈர்க்கப்படுகிறார்கள். சுற்றுப்புறங்களில் இடைவிடாத சந்திப்புகள் நிகழ்ந்துகொண்டு இருக்கின்றன.

**நிறைவு:** ஆயர்மாமன்ற செயல்பாட்டின் அனுபவங்களும் கருத்துகளும் அடிப்படையாக அமைந்துள்ளன. ஆயர் பேரவைகளில் விவாதங்கள், ஆயர்மாமன்றத்தின் ஆர்வம் நம்முடைய தூரநோக்குப் பயணத்தை ஊக்குவிப்பதாக.

16&17 செப்டம்பர் 2023

# Newbec

NEW WAY OF BEING CHURCH ஆண்டின் பொதுக்காலம் 24 ஆம் ஞாயிறு

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஒன்றிப்பு (உள்ளடக்கியது) பங்கெடுப்பு, (படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)

மாதாந்திர கருப்பொருள்:
திருஅவையும் விளிம்பு நிலையில் வாழும் மக்களும்

மாதாந்திர நிகழ்வு:
உலக குடியேற்றவாசிகள் மற்றும் அகதிகள் தினம்




# கூச்சிங் மாமறைமாவட்டம்
# ஆயர்மாமன்றத்திற்கு முன் தொகுக்கப்பட்ட அறிக்கை

அறிமுகம்: முக்கிய மேய்ப்புப்பணி நிகழ்வுகள் மூலம் ஆவிக்குரிய மாமறைமாவட்ட ஆயர்மாமன்றம் 1989 ஆம் ஆண்டு தொடங்கியது. 2012 ஆண்டு முதல் மாமறைமாவட்ட தூரநோக்கு: “நாம் திருஅவை, இறைவார்த்தையின் சீடர்கள், தூதுரைப்பணிக்காக ஒன்றித்திருத்தல்” இந்த கருப்பொருளின் மூலம், அருள்பணியாளர்கள், துறவறத்தார், பங்குகள் மற்றும் கிராமங்களில் உள்ள அடிமட்டப் பொதுநிலையினர் அனைவரோடும் ஒத்துழைத்து ஈடுபாடுகளை ஊக்குவிக்கிறது. இந்நிகழ்வு தூய ஆவியாரின் தூண்டுதலே.

பங்கு மேய்ப்புப்பணி பேரவைகள், ஆணையங்கள், மற்றும் குழுக்களை நிறுவுவதன் மூலம் குடும்ப வாழ்வு வளர்ச்சி, விவிலியம் மற்றும் நம்பிக்கை உருவாக்கப்பயிற்சிகள், தூதுரைப்பணி & மனித வள மேம்பாடு, இளைஞர், இறைஅழைத்தல், சமூக தொடர்புகள், மீட்பளித்தல் மற்றும் தீய ஆவிகளை விரட்டுதல் ஆகியவை தொடர்ந்து வளர்ச்சி அடைகின்றது.